குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திரு.S.சதாம்உசேன், B.A., L.L.B.
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி..எண் 29/2023

ம.சா. 1

2025–ம் ஆண்டு ஜுன் மாதம் 19–ம் தேதி வியாழக் கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆர்.சதீஷ்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அம்பிகா | தொழில் | |
| கணவர் பெயர் | பெருமாள் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: காலை 12.21 மணி,

Complainant Ambika present. Advocate Mr.N.Murugan present for Complainant. Accused Devi Present. Advocate Mr.G.Prabhu present for Accused.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

1. நான் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது கணவர் 8ம் வகுப்பு வரை படித்துள்ளார். நான் கடை வைத்து டைலர் தொழில் செய்து வருகிறேன். என்னிடம் வேலை ஆட்கள் யாரும் இல்லை. எனது கணவரும் டைலர் தான் ஆனால் தற்போது உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் அவர் வேலை செய்வது இல்லை. நான் துணி தைக்கும் வருமானத்தில் இருந்து தான் எனது குடும்பத்தை கவனித்து வருகிறேன் என்றால் சரி. எனக்கு ரகுராம் மற்றும் அகல்யா என்று 2 குழந்தைகள் இருக்கின்றன.

2. நான் எங்கள் ஊரில் மாரியம்மாள் மகளிர் சுயஉதவிக் குழுவில் உறுப்பினராக இருக்கிறேன் என்றால் சரி தான். மாரியம்மாள் மகளிர் சுயஉதவிக் குழுவில் சிறிது காலத்திற்கு நான் தலைமை பொறுப்பில் இருந்தேன் என்றால் சரியல்ல, கண்ணம்மாள் மற்றும் குப்பாய் ஆகியோர் தான் தலைமை பொறுப்பில் இருந்தனர். குப்பாய் என்பவர் ரோஜா மகளிர் சுயஉதவி குழுவின் பொருப்பாளர் என்றால் சரிதான். ரோஜா மகளிர் சுயஉதவி குழுவில் நான் உறுப்பினராக இருக்கிறேன் என்றால் சரிதான்.

3. மேற்படி ரோஜா மகளிர் சுயஉதவி குழுவில் ஆஜர் எதிரியும் உறுப்பினர் என்றால் சரிதான். மேற்படி ரோஜா மகளிர் சுயஉதவி குழு சுமார் 12 வருடமாக இருந்து வருகிறது. மேற்படி ரோஜா மகளிர் சுயஉதவி குழுவில் ரூபாய் 5,000/– வரை கடனாக பெற்று சிறு சேமிப்பாக மாதம் ரூ.1200/– தவனையாக 6 மாதம் செலுத்துவேன். மேற்படி தவனைத் தொகையை கனரா வங்கி பாப்பம்பாடி கிளையில் செலுத்துவேன். எனக்கு கனரா வங்கி, பாப்பம்பாடி கிளையில் வங்கி கணக்கு இருக்கிறது.

4. மேற்படி எனது வங்கி கணக்கின் கணக்கு எண் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி வங்கி கணக்கில் நான் பணப்பரிவர்த்தனை செய்து வருகிறேன். மேற்படி வங்கி கணக்கில் சுமார் வருடத்திற்கு கையில் இருக்கும் தொகையை பொறுத்து சுமார் ரூ.20,000/– வரை பரிவர்த்தனை செய்வேன். கடந்த 3 வருடமாக எந்த பணபரிவர்ததனையும் எனது வங்கி கணக்கில் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் கடந்த 6 மாதமாக பணப்பரிவர்த்தனை செய்து வருகிறேன்.

5. நான் வருமான வரி கணக்கு தாக்கல் செய்து வருகிறீர்களா என்றால் இல்லை. நான் வருமான வரி செலுத்தவில்லை என்றால் சரிதான். எனது கணவரும் வருமான வரி செலுத்தவில்லை என்றால் சரிதான். எனக்கு விவசாய நிலம் இருந்ததா என்றால் கடந்த 6 வருடத்திற்கு முன்பு எனது பெயரில் இருந்த நிலத்தை விற்றுவிட்டேன். மேற்படி சொத்து சங்கிரி வட்டம், காவேரிபட்டி கிராமத்தில் சுமார் 26 செண்ட் இருந்தது. மேற்படி சொத்து எனது தந்தையிடம் இருந்து எனக்கு கிடைக்கப் பெற்ற சொத்து. மேற்படி சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை.

6. நான் இந்த வழக்கிற்காக என்னுடைய பெயரில் சொத்து இருந்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் காசோலையை யார் பூர்த்தி செய்தது என்று எனது சட்ட அறிவிப்பு, புகார் வாக்குமூலம், மற்றும் பிரமாண பத்திரிக்கையில் சொல்லவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. இவ்வழக்கு காசோலையில் குறிப்பிட்டுள்ள அம்பிகா என்பவர் நான் தான் என்பதை நிரூபிக்க எந்த ஆவணங்களும் தாக்கல் செய்ய வில்லை என்றால் தெரியவில்லை.

7. இவ்வழக்கு காசோலையில் குறிப்பிட்டுள்ள "Ambiga" என்கிற பெயரில் திருத்தி எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் வழக்கு காசோலையின் பெயர் திருத்தி எழுதப்பட்டிருக்கிறது என்றாலும் சரியல்ல. இவ்வழக்கு காசோலையில் இரண்டாவது வரியில் ஆங்கிலத்தில் என்ன எழுதியுள்ளது என்று படிக்க முடியுமா என்றால் எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது. ஆங்கிலத்தில் எழுதியுள்ள தொகையில் "Lakh Rupes" என்னும் வார்ததைகளில் எழுத்து பிழை இருக்கிறது என்றால் சரியல்ல.

8. இவ்வழக்கு காசோலையில் வங்கி கணக்கின் கீழ் 2010 என்று இருக்கிறது என்றால் சரி. இவ்வழக்கு காசோலையில் இருக்கும் கையொப்பம் அடிக்கப்பட்டுள்ளதா என்றால் சரி, ஆனால் வங்கியில் செலுத்தும் போது வங்கியில் அடிக்கப்பட்டது. மேற்படி கையொப்பம் வங்கியில் அடிக்கப்பட்டது என்பதை நிரூபிக்கும் வகையில் எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு காசோலையில் கையொப்பம் அடிக்கப்பட்டுவிட்டதால் இந்த காசோலை செல்லாது என்றால் சரியல்ல.

9. இவ்வழக்கு காசோலை தொகையாக ரூ.9000.00 என்று ஓன்பதாயிரம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி இவ்வழக்கு காசோலையில் உள்ள தேதி யாரால் பூர்த்தி செய்யப்பட்டது என்றால் காசோலை பூர்த்தி செய்யப்பட்டு தான்

கொடுக்கப்பட்டது. இவ்வழக்கு காசோலை ரோஜா மகளிர் சுயஉதவி குழுவில் கடனை திருப்பி செலுத்துவதற்காக 2010 ம் ஆண்டு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி கடனை திருப்பி செலுத்தியதால் தான் ரோஜா மகளிர் சுயஉதவி குழுவின் தலைவி கையொப்பத்தை அடித்துவிட்டு வாங்கி வைத்துக் கொண்டார் என்றால் சரியல்ல.

10. மேற்படி காசோலையை வைத்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரியை எனக்கு கடந்த 20 வருடமாக தெரியும். ஆஜர் எதிரியின் சகோதரர் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியின் சகோதரர் சீனிவாசன் என்பவரிடம் நான் கடன் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. சீனிவாசன் எனக்கு எந்த தொகையும் தரவேண்டியது இல்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரியின் பெற்றோரை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியின் பெற்றோர் கொங்கணாபுரம் காவல் நிலையத்தில் எனக்கு எதிராக புகார் கொடுத்தது தெரியுமா என்றால் தெரியாது.

11. மேற்படி கொங்கணாபுரம் காவல் நிலையத்தில் நானும் எனது கணவரும் வாக்குமூலம் எழுதி கொடுத்துள்ளோம் என்றால் குப்பாய் மீது கொடுக்கப்பட்ட புகாருக்காக எழுதி கொடுத்தோம். நான் எழுதி கொடுத்த வாக்குமூலத்தை இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கிறேன் என்றால் சரி. ஆஜர் எதிரியின் பெற்றோரிடம் இருந்து அசல் கிரைய ஆவணத்தை பெற்று மகளிர் சுயஉதவிக் குழுவில் கடன் வாங்கி தருவதாக பெற்றுக் கொண்டு கடன் பெற்று தராததால் என் மீதும், குப்பாய் மீதும் சேலம் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, குப்பாய் மீது புகார் அளிக்கப்பட்டது.

12. மேற்படி புகாரில் நாங்கள் வாக்குமூலம் எழுதி கொடுத்த போது அசல் கிரைய ஆவணத்தை ஆஜர் எதிரியின் பெற்றோரிடம் ஒப்படைத்தேன் என்றால் ஆஜர் என்னிடம் எந்த ஆவணமும் கொடுக்கவில்லை, குப்பாயிடம் கொடுத்த ஆவணத்தை அவர் திருப்பி கொடுத்தாரா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி அசல் ஆவணம் என்னிடம் உள்ளது என்று காவல் நிலையத்தில் என்னை விசாரித்தனர் என்னிடம் இருந்து எந்த கையொப்பம் பெறவில்லை என்றால் சரி. நான் இவ்வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் காவல் நிலையத்தில் கையொப்பம் இட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் ஆஜர் எதிரியிடம் பணத்தை கேட்ட போது திருப்பி தராததால் இவ்வழக்கை தொடர்ந்துள்ளேன்.

13. கொங்கணாபுரம் காவல் நிலையத்திற்கு சென்று வந்த பிறகு ஆஜர் எதிரிக்கும் எனக்கு பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரியல்ல. அதன்பின்பு கடன் தொகையை திருப்பி கேட்டேன், தற்போது பணம் இல்லை என்றும் பிறகு தருகிறேன் என்றும் கூறினார். கொங்கணாபுரம் காவல் நிலையத்திற்கு சென்று வந்தது 2019 வருடம் என்றால் ஞாபகம் இல்லை, சுமார் 5-6 வருடத்திற்கு முன்பு இருக்கும். என் மீது கொங்கணாபுரம் காவல் நிலையத்தில் ஆஜர் எதிரி புகார் கொடுத்ததற்காக எதிரியின் மீது இவ்வழக்கை தொடர்ந்துள்ளேன் என்றால் சரியல்ல.

14. இவ்வழக்கு காசோலை தொகையை ஆஜர் எதிரிக்கு கடனாக கொடுப்பதற்கு எனக்கு எப்படி பணம் வந்தது என்று சட்டஅறிவிப்பு, புகார், பிரமாண வாக்குமூலம் ஆகியவற்றில் சொல்லவில்லை என்றால் இல்லை. இவ்வழக்கு காசோலையை தொகையை ஆஜர் எதிரிக்கு யார் முன்னிலையில் நான் கொடுத்தேன் என்றால் தனிப்பட்ட முறையில் தான் கடன் கொடுத்தேன். ஆஜர் எதிரிக்கு நான் கடன் கொடுத்தது எனது கணவர் மற்றும் மாமியாருக்கு தெரியும். மேற்படி சங்கதியை எனது சட்டஅறிவிப்பு, புகார், பிரமாண வாக்குமூலம் ஆகியவற்றில் சொல்லவில்லை என்றால் சரி.

15. குப்பாய் என்பவரிடம் இருந்து காசோலையை பெற்று இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பொதுவாக ஒருவருக்கு கடன் கொடுக்கும் போது பொது நபர் முன்னிலையில் கொடுக்கப்படும் என்றாலும் அவ்வாறு கொடுக்கவில்லை என்பதால் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கு ரூ.9,00,000/- கடனாக கொடுத்ததற்கு காசோலையை தவிர வேறு ஆவணங்கள் ஆஜர் எதிரியிடம் இருந்து பெற்றுள்ளேன் என்றால் இல்லை, இந்த வழக்கு காசோலையில் மட்டும் தான் பெற்றேன்.

16. ரூ.9,00,000/- கடனாக கொடுக்கும் போது கடனுறுதி சீட்டு, கிரைய ஆவணம் போன்றவற்றை பெற்றுக் கொண்டு தான் கடன் கொடுப்பார்கள் என்றாலும் அவ்வாறு நான் பெறவில்லை என்பதால் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கு நான் கடன் கொடுக்கும் போது எதிரியின் கணவரை வைத்துக் கொண்டு கொடுத்திருக்கலாம் என்றால் ஆஜர் எதிரியின் கணவருக்கு கடன் கொடுத்தது தெரியும். மேற்படி சங்கதியை எனது சட்டஅறிவிப்பு, புகார், பிரமாண வாக்குமூலம் ஆகியவற்றில் சொல்லவில்லை என்றால் சரி. இவ்வழக்கு காசோலையை ஆஜர் எதிரி என்னிடம் கொடுத்ததற்கு எந்த சாட்சியும் இல்லை என்றால் சரி.

17. ஆஜர் எதிரி காசோலை தேதியில் வசூலுக்கு செலுத்த எதிரி சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்படி காசோலையை வசூலுக்கு செலுத்தியது ஆஜர் எதிரிக்கு தெரியாது என்றால் சரியல்ல. மேற்படி காசோலையை யார் எழுதியது என்றால் பூர்த்தி செய்யப்பட்டு தான் என்னிடம் கொடுக்கப்பட்டது. இவ்வழக்கு காசோலையை தொகையை ஆஜர் எதிரிக்கு கடனாக கொடுப்பதற்கு எனக்கு வசதி இல்லை என்பதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. மேற்படி இவ்வழக்கு காசோலை 2010 ம் வருட காசோலை என்றாலும் அதை வைத்து 2023 ம் வருடம் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் ஏற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

18. இவ்வழக்கு காசோலையில் ஆஜர் எதிரியின் கையொப்பம் குறுக்கு கோடிட்டு அடிக்கப்பட்டுள்ளதால் வங்கியில் வசூலுக்கு எடுத்துக் கொண்டது தவறு என்றால் சரியல்ல. மேற்படி காசோலையில் அடித்தல் திருத்தல் மற்றும் எழுத்து பிழை இருப்பதால் காசோலை செல்லாதது என்றால் சரியல்ல. மேற்படி காசோலை மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் படி ஏற்றுக் கொள்ளதக்கது அல்ல என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி என்னிடம் எந்த கடனும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் எனக்கும்

கடந்த 5 வருடங்களாக முன் விரோதம் காரணமாக பேச்சு வார்த்தை உள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் கூறியுள்ள தேதியில் ஆஜர் எதிரி என்னிடம் இருந்து எந்த கடனும் பெறவில்லை என்றால் சரியல்ல.

19. ஆஜர் எதிரி நேரடியாக என்னிடம் காசோலை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரியை பழிவாங்கும் எண்ணத்தோடு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் நான் கொடுத்துள்ளேன் என்று சொல்வது பொய் என்றாலும் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மதம் இல்லை என்றாலும் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 01.38 மணி.

Sd/S.Sadhamhusain
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur.